# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.7/2020

3 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவனாண்டி | பி.வா.சா.2 | |
| த/பெ. | மகாலிங்கம் | | |
| கிராமம் | செம்பட்டி | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 57 |

---

முதல் விசாரணை 21-01-2026.

நான் இந்த வழக்கின் 3 முதல் 6ம்பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சி நான் 4ம் பிரதிவாதி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டலதுணைவட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். வழக்குகோப்புகள் அடிப்படையில் விவரங்கள் எனக்குத் தெரியும். என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) சர்வே எண்.203/42ன் அ பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) சர்வே எண்.203/42ன் அடங்கல் கணக்கு உண்மை நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) சர்வே எண்.203/42ன் புலவரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) சர்வே எண்.166/4ன் அ பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) சர்வே எண்.166/4ன் அடங்கல் கணக்கு உண்மை நகல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) சர்வே எண்.166/4ன் புலவரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.21 14:32:49 +0530